379.5493 SAT (PR)

PERMANENT REFERENCE

# ஐரோப்பியர் ஆட்சியில் இலங்கைக் கல்வியில் மொழி

LIBRARY
25 SEP 2006
Eastern University, Sri Lanka.

அனுஷ்யா சத்தியசீலன்

ExM.Phil10
Thesis
Library - EUSL

முதுதத்துவமாணி கல்விப் பட்டத்திற்கான தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட

ஆய்வுக்கட்டுரை

This book/journal was donated by
63353
Eastern University, Sri Lanka.

கல்வியியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
இலங்கை

1999

PROCESSED
Main Library, EUSL

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கை ஏறக்குறைய நாலரை நூற்றாண்டு காலம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் என்ற ஐரோப்பிய ஆட்சியாளரின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்தது. அக்காலங்களில் அவ் அந்நிய ஆட்சியாளருடைய மொழிகள் இங்கு ஆட்சிமொழியாகக், கல்வி மொழியாக முதன்மைப்படுத்தப்பட்டன. தமது அதிகாரத்தை வெளிப் படுத்தவும், ஸ்திரப்படுத்தவும் அத்தகைய நடவடிக்கையினையே அவர்கள் பின்பற்றுவார்கள் என்பது எதிர்பார்க்கப்பட வேண்டியதே. ஆயின், ஆட்சிமொழியாகத் தத்தம் மொழிகளை முதன்மைப்படுத்தினாலும் கல்வி மொழி பொறுத்து சிறிது நிதானத்துடனேயே செயற்பட வேண்டிய தேவை அவர்களுக்கிருந்தது. அத்தகைய தேவைகளின் அடிப்படையிலேதான் கல்விமொழியாக/மொழிகளாக ஆட்சியாளர் மொழிகளுடன் சுதேச மொழிகளும் இடம் பிடித்துக் கொள்வதனைக் காண்கின்றோம். காரணங்கள் பலவாறாக அமைந்தாலும் அந்நியராட்சிக் காலங்களில் இலங்கை மக்களுடைய சுயமொழிகளான தமிழும், சிங்களமும் குறிப்பிடத் தக்களவிற்குக் கல்வியில் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளமையை மறப்பதற் கில்லை. அந்த வகையில் ஐரோப்பியராட்சியில் இலங்கைக் கல்வியில் மொழி நிலைமைகள் பற்றி ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

இதன் முதலாவது அத்தியாயம் முன்னுரை ஆகும். ஐரோப்பியர்களது கீழைத்தேய வருகை, இலங்கை வருகை, ஆதிக்கப் படர்ச்சிக்கான பொதுவான பின்னணி, ஆட்சியாளர் நோக்கங்கள், நோக்கங்களை நிறைவேற்ற வந்த கிறித்தவ மிஷனரிமாருடைய செயற் பாடுகள், கல்வி அதற்கான கருவியாக்கப்பட்டமை பற்றிக் குறிப்பிடுவதாக இவ்வத்தியாயம் அமைந்துள்ளது.

இரண்டாவது அத்தியாயம் 'பாரம்பரியக் கல்வி' பற்றியதாக அமைகின்றது. இலங்கையின் வரலாற்றாரம்ப காலமாகிய கி.மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்து போர்த்துக்கேயரின் வருகை இடம் பெற்ற கி.பி. 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையிலான கல்விச் செயற்பாடுகளில் - செயற்பட்ட நிறுவனங்கள், கல்வியின் தன்மை பற்றிக் குறிப்பிட்டு கல்வியில் மொழி நிலைமைகளை விரிவாக ஆராய்வதாக அமைந்துள்ளது. பிரித்தானியராட்சியின் ஆரம்பம் வரையிலான பாரம்பரியக் கல்விப் போக்கும் இதில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மூன்றாவது அத்தியாயமானது போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோருடைய இரண்டரை நூற்றாண்டு கால ஆட்சியில் கல்விக் கொள்கைகள், கல்வியில் மொழிக்கொள்கைகள், போக்குகளை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. கல்வியில் போர்த்துக்கேயமொழி, டச்சுமொழி கொண்டிருந்த பங்கு, சுதேச மொழிகள் கொண்டிருந்த பங்கு பற்றி இங்கு எடுத்து ஆராயப்படுகின்றது.

நான்காவது அத்தியாயத்தில் ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகளாக இலங்கையைத் தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த பிரித்தானியராட்சிக்கால கல்விநிலைமைகள் ஆராயப்படுகின்றன. விசேடமாகப் பிரித்தானியராதிக்கப் படர்ச்சி, பிரித்தானியர் மொழிக் கொள்கை உருவாக்கம், பின்னணி என்பன பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ஐந்தாவது அத்தியாயமானது 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் இருந்து எழுச்சி பெறத் தொடங்கிய தேசிய மறுமலர்ச்சிக்கால கல்வி நிலைமைகளில் மொழி பெற்ற இடத்தினை விளக்குவதாக அமைகின்றது.

கலாசார மறுமலர்ச்சி, அதன் பின்னணி, மறுமலர்ச்சியாளர்கள், ஸ்தாபனங்கள், கலாசார மறுமலர்ச்சி தேசிய மறுமலர்ச்சியாகிய நிலைமைகள் இங்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளன.

ஆறாவது அத்தியாயம் பிரித்தானியராட்சியின் மொழிக் கொள்கை விரிவாக்கம் பற்றியதாக அமைகின்றது. ஆங்கில மொழிக் கொள்கை நடைமுறைச் செயற்பாடுகளினூடாக மாறுபட்டுச் சென்ற நிலையில் தொடர்ந்து முன்வைக்கப்பட்ட கல்விச் சிபார்சுகளில் சுதேசிய மொழிகள் மெல்ல மெல்ல முக்கியத்துவப்படுத்தப்பட்டமையினையும், ஆங்கிலக் கல்வியின் தொடர் செல்வாக்கு எங்ஙனம் அமைந்தது என்பது பற்றியதுமான விளக்கங்களை அளிக்கின்றது.

இறுதி அத்தியாயமாக முடிவுரை இடம் பெறுகின்றது. அந்நியராட்சிக்கால மொழிக்கொள்கைத் தாக்கம், விசேடமாகப் பிரித்தானியர்கால மொழிக்கொள்கை உருவாக்க, விரிவாக்கல் போக்குகளினால் ஏற்பட்ட தாக்கங்கள் போன்றவற்றை விளக்குவதுடன் சுதந்திர இலங்கையின் ஆட்சிமொழி, கல்விமொழிக் கொள்கை உருவாக்கத்திற்கு அவை பின்புலமாக அமைந்த தன்மையினையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஆய்வுச் சுருக்கம் | | V - VII |
| நன்றியுரை | | VIII - IX |
| அத்தியாயம் | | |
| ஒன்று | : முன்னுரை | 1 - 10 |
| இரண்டு | : இலங்கையின் பாரம்பரியக்கல்வி | 11 - 38 |
| மூன்று | : போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலத்தில் மொழி | 39 - 69 |
| நான்கு | : பிரித்தானியரின் மொழிக்கொள்கை உருவாக்கம் | 70 - 118 |
| ஐந்து | : தேசியமறுமலர்ச்சியின் தாக்கம் | 119 - 151 |
| ஆறு | : பிரித்தானியரின் மொழிக்கொள்கை விரிவாக்கம் | 152 - 208 |
| ஏழு | : முடிவுரை | 209 - 222 |
| நூற்பட்டியல் | | 223 - 237 |